# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **இந்திய குடிமைப்பணி**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய குடிமைப்பணி

**தமிழ்நாடு அரசு 69% இட ஒதுக்கீடு:-**

- ❖ செல்வி ஜெயலலிதாவின் தமிழ்நாடு அரசாங்கத்தின் முயற்சியால் 1994ல் 76வது சட்டதிருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் -பட்டது. மேலும் இது 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தது.
- ❖ எனவே இது 50% இட ஒதுக்கீடு விதியை மீறியதானாலும், உச்சநீதி -மன்ற புலணாய்விற்கு உட்படுத்த இயலவில்லை.
- ❖ எனினும் தற்போதைய சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் இத்தகைய தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டில் தலையில் கைவைக்க வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகிறது.
- ❖ 1979ல் B.P. மண்டல் தலைமையில் பிற்பட்ட வகுப்புகள் கமிஷன் நியமிக்கப்பட்டது.
- ❖ மண்டல் கமிஷன் தனது அறிக்கையை 1980ல் சமர்ப்பித்தது. பின்னர் கிடப்பில் போடப்பட்டது.
- ❖ வி.பி. சிங் அரசு 1990ல் மண்டல் அறிக்கையை ஏற்றுக்கொண்டது.

**பொதுப்பணிகள் ஆணையம் (Public Service Commision)**

- ❖ சரத்தில் 315லிருந்து 323 வரையிலானவற்றில் பொதுப்பணி ஆணையம் பற்றி கூறப்பட்டுள்ளது.

**மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் (சரத்து - 315)**

**தோற்றம்:**

1. 1923 - லீ கமிஷன் பரிந்துரை
2. 1929 - அரசு பணியாளர் தேர்வாணையம்

- ❖ மத்திய அரசிற்கு ஒரு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருத்தல் வேண்டும்.
- ❖ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் தொகுதிகளுக்கு பொதுவாக ஒரே அரசுப்பணியாளர் தேர்வாணையம், இது கூட்டு தேர்வாணையம் (joint Commission) எனப்படும். இதனை அமைப்பது பாராளுமன்றம் ஆகும்.
- ❖ மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது மாநில ஆளுநரின் வேண்டுகோளின்படி, குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று அம்மாநிலத்திற்கு அரசுப் பணியாளர் தேர்வாணையமாக செயல்படலாம். மத்திய அரசுப்

பணியாளர் தேர்வாணையத்தின், கூட்டு தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

- ❖ தேர்வாணையத்தின் உறுப்பினர்களில் கிட்டத்தட்ட ஒரு பகுதியினர் (one-half) மத்திய அல்லது மாநில அரசின் கீழ் குறைந்தது 10 ஆண்டுகள் அரசுப் பதவி ஏற்று இருந்தவர்களாக இருக்க வேண்டும். உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை எது முதலில் நிறைவேறுகிறதோ அதன்படி பதவியின் இருக்கலாம். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது கூட்டுத் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் அளிக்க வேண்டும்.
- ❖ பதவிக்காலம் முடிந்த உறுப்பினர்கள் மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் மத்திய அல்லது மாநில அரசின் கீழ் எப்பணியில் அமர்வதற்கும் தகுதியற்றவர்கள்.
- ❖ உறுப்பினர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனில் நிரூபிக்கப்பட்ட தீயநடத்தை காரணமாக உச்ச நீதிமன்ற அறிவிக்கை (report)யின்படி குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யலாம். இவ்வாறு, உச்சநீதிமன்ற அறிவிக்கை வரும்வரை அவ்வுறுப்பினரை இடைநீக்கம் செய்யலாம்.
- ❖ நொடிப்பு நிலை, பதவிக் காலத்தில் வேறு ஏதேனும் ஊதியம் பெறும் வேலை, உடல் அல்லது உள்ள தளர்ச்சியுடையவராக குடியரசுத் தலைவர் கருதினால் உச்ச நீதிமன்றத்திற்கு சுட்டி அனுப்பாமலே உத்தரவு மூலமாக குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கலாம்.
- ❖ தலைவர் அல்லது உறுப்பினர் எவரேனும் அரசு சார்பான ஒப்பந்தங்களில் தங்களுக்கு இலாபம் வரும் நோக்குடன் பங்கெடுத்துக் கொண்டால் அவர் தீய நடத்தைக் குற்றம் புரிந்தவராக கருதப்படுவார்.

**மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**தோற்றம்:**

1. 1923 - லீ கமிஷன் பரிந்துரை
2. 1929 - அரசு பணியாளர் தேர்வாணையம் (இந்தியாவின் முதலாவது)
3. 1957 - மெட்ராஸ் பணியாளர் தேர்வாணையம்
4. 1970 - TNPSC எனப் பெயர் மாற்றம்

**அமைப்பு**

- ❖ தலைவர்
- ❖ 11 உறுப்பினர்கள்
  - ❖ தேர்வு கட்டுப்பாட்டாளர்

- ❖ உறுப்பினர் செயலர்
- ❖ ஆளுநரால் நியமனம்

**பதவிக்காலம் (சரத்து 316)**

❖ 6 வருடங்கள் / 62 வயது வரை

**பதவி நீக்கம் (சரத்து 317)**

❖ குடியரசுத் தலைவரால்

கீழ்க்கண்டவைக்கு ஆலோசனை வழங்குகிறது.

1. பணி நியமனங்கள்

**அதிகாரம் மற்றும் பணிகள் (சரத்து 320)**

1. மாநில அரசில் கீழ்வரும் அனைத்து பணிகளுக்குமான தேர்வினை நடத்துதல்.
2. துறை ரீதியிலான தேர்வுகள் நடத்துதல்.
3. ராஷ்ட்ரிய இந்திய ராணுவ கல்லூரிகள் தேர்வு நடத்துதல்.
4. பணி நியமனம், பதவிஉயர்வு மற்றும் பணியிடமாற்றம் நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்.
5. பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள்
6. தற்காலிக நியமனங்கள் உருவாக்கம்.
7. அரசு பணியாற்றும்போது நேர்ந்த ஊறுகளுக்கு இழப்பீடு கேட்டு செய்யப்படும் கோரிப்பை - ஆலோசனை.
8. ஆண்டறிக்கை சரத்து 322 - ஆளுநரிடம் சமர்பித்தல்